# මැතිවරණ කොමිෂන් සභාව
# தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය : 011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
ෆැක්ස්/ தொலைநகல் : 011-2868426

*web : www.elections.gov.lk e-mail : info@elections.gov.lk*

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යලය
සරණ මාවත,රාජගිරිය (10107)
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய (10107)


| | | |
|---|---|---|
| මගේ අංකය : <br> எனது இல: **EC/EDR/PE/2020/4** | ඔබේ අංකය : <br> உமது இல: | දිනය : <br> திகதி : **2020.03.06** |

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,
அனைத்து மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
அனைத்து திணைக்களத் தலைவர்கள்,
அனைத்து மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள் மற்றும்
மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள்,
அனைத்து அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்,
உள்ளூர் அதிகாரசபைகளின் தலைவர்கள்/ ஆணையாளர்கள்/ செயலாளர்கள்,

## பாராளுமன்றத் தேர்தல் - 2020
## அரச ஆதனங்கள் முறைகேடான விதத்தில் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்காக ஒருங்கிணைப்பு அலுவலரொருவரைப் பெயர்குறித்தல்

i. அரச ஆதனங்கள் முறைகேடான விதத்தில் பயன்படுத்தப்படுவதைத் தடுத்தலும் தேர்தல் சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்தலும்.
ii. தேர்தல் ஆணைக்குழுவினால் விடுக்கப்படும் பணிப்புகள்.

01. இவ்விடயங்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் பாராளுமன்றத் தேர்தலுக்குரியதாக வெளியிடப்பட்டுள்ள அரசாங்கத்திற்கும் அரச கூட்டுத்தாபனங்கள்/நியதிச்சட்ட சபைகளுக்கும் சொந்தமான ஆதனங்கள் தேர்தல் காலப்பகுதியினுள் முறைகேடான விதத்தில் பயன்படுத்தப்படுவதைத் தடுத்தலும், அலுவலர்களதும் ஊழியர்களதும் ஆட்சேர்ப்பு/ பதவியுயர்வு/ இடமாற்றல் என்பவற்றை மட்டுப்படுத்தலும் தொடர்பான EC/EDR/PE/2020/4 ஆம் இலக்கமும் 2020.03.03 ஆந் திகதியும் கொண்ட சுற்றறிக்கைக்கு மேலதிகமாக.

02. 2020.04.25 ஆந் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல் வாக்கெடுப்பு தொடர்பில் அரச ஆதனங்களை முறைகேடான விதத்தில் பயன்படுத்தல் தொடர்பான முறைப்பாடுகள்/தேர்தல் பிணக்குகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் பணிகளுக்குரிய அந்தந்த அமைச்சுக்கள், மாகாண சபைகள், திணைக்களங்கள், மாகாண சபை அமைச்சுக்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அவ்வாறான நியதிச்சட்ட சபைகள் முதலியவற்றின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளைத் திருத்துவதற்கு அமைச்சுச் செயலாளர்/தாபனத் தலைவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களில் மேலதிக செயலாளரொருவர் அல்லது நிருவாக விடயத்திற்குப் பொறுப்பான சிரேட்ட உதவிச் செயலாளரொருவரையும் திணைக்களங்களில், திணைக்களத் தலைவர்/மேலதிக பிரதானி அல்லது அந்த மட்டத்திலுள்ள சிரேட்ட அலுவலரொருவரையும், மாகாண சபைகளின் பிரதம செயலாளரைப் பிரதிநிதித்துவம் செய்வதற்குப் பொருத்தமான பிரதி பிரதம செயலாளரொருவரையும், கூட்டுத்தாபனங்கள்/ சபைகள் முதலியவற்றில் நிருவாக விடயத்திற்குப் பொறுப்பான மேலதிக பொது முகாமையாளரொருவரின் மட்டத்திலுள்ள சிரேட்ட அலுவலரொருவரையும் பெயர்குறித்து அனுப்பிவைக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

03. அதற்கமைய, கொழும்பு மாவட்டத்திற்குரிய அரச நிறுவனங்களின் முறைப்பாடுகள் தொடர்பான ஒருங்கிணைப்பு அலுவலரைப் பெயர்குறித்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின் (EC/EDR/PE/2020/4) மூலம் துரிதமாக பெக்ஸ் மூலமும் (011-2868448/2877208) அஞ்சல் மூலமும் தேர்தல் பிணக்குத் தீர்வு அலகு, தேர்தல் ஆணைக்குழு, சரண மாவத்தை, இராஜகிரிய என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் ஏனைய மாவட்டங்களின் அரச நிறுவனங்களின் முறைப்பாடுகள் சம்பந்தமாக பெயர்குறிக்கப்படும் ஒருங்கிணைப்பு அலுவலரை குறித்த மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் பிரதி/உதவி தேர்தல்கள் ஆணையாளர்களிடம் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

04. மாகாண சபை அமைச்சுக்களில் உரிய மாகாண சபை அமைச்சின் செயலாளரும், ஆளுநர் செயலகம் தொடர்பில் ஆளுநரின் செயலாளரும், மாகாண திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகளின் கீழ் இயங்கும் வேறு நிறுவனங்களில் உரிய திணைக்கள/ நிறுவனத் தலைவரும், மாநகர சபைகளில் மாநகர ஆணையாளர் அல்லது மாநகர செயலாளரும், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளில் அவற்றின் செயலாளர்களும் இந்த ஒருங்கிணைப்பு அலுவலர்களாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருப்பதுடன், இந்நிறுவனங்களின் குறிப்பிட்ட அலுவலர்கள் சம்பந்தமான தகவல்களை உரிய மாகாணங்களின் பிரதி/ உதவி தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அதற்கான படிவத்தின் (EC/EDR/PE/2020/4) மூலம் அறிவிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

05. இத்தகவல்களை 2020.03.16 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுத் தர வேண்டும் என்பதை தயவுடன் கவனத்தில் கொள்ளவும்.

**மஹிந்த தேசப்பிரிய**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)

பிரதிகள்:- 1. **அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள்** - தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும்.

2. **அனைத்து மாவட்ட பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள்** - இக்கடிதத்தின் பிரதியொன்றையும் படிவமொன்றையும் பொருத்தமான அறிமுகக் கடிதமொன்றுடன் அனைத்து மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதி பிரதம செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உட்பட மாகாண திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாகாண சபைகளின் கீழ் இயங்கும் சபைகள்/அதிகாரசபைகள் போன்ற நிறுவனங்களின் தலைவர்கள், உள்ளூர் அதிகாரசபைகளின் ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கு தாமதமின்றி அனுப்பிவைத்து உரிய தகவல்களைத் திரட்டிக்கொள்வதற்கும் உரிய தகவல்களை முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையங்களின் பணிகளை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக அனுப்பிவைப்பதற்கும்.

**EC/EDR/PE/2020/4 இலக்க சுற்றறிக்கை கிடைக்கப்பெற்றமையும் தேர்தல் முறைப்பாடுகள் ஒருங்கிணைப்பு அலுவலரொருவரைப் பெயர் குறித்தலும்**

**(கீழ்க் குறிப்பிடப்படும் படிவத்தை தயவுசெய்து நிறுவனத்தின் உத்தியோகபூர்வ கடிதத் தலைப்பில் தயாரித்து அனுப்ப முடியுமாயின், மிகவும் சிறந்தது.)**

அமைச்சுக்களில் இந்தச் சான்றிதழை செயலாளர் அல்லது மேலதிக செயலாளரொருவரினாலும், திணைக்களமொன்றாயின், திணைக்களத் தலைவர் அல்லது மேலதிக பிரதானியொருவரினாலும், ஒரு கூட்டுத்தாபனம் அல்லது ஒரு சபையாயின், பொது முகாமையாளர்/ மேலதிகப் பொது முகாமையாளர் பதவி அல்லது அதற்குச் சமமான ஒரு பதவியை வகிக்கின்ற அலுவலர் ஒருவரினாலும் கையொப்பமிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

..............................................................................................................................................

- தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.gov.lk என்ற இணையத்தளத்திலும் இந்தப் படிவத்தைக் காணலாம்.
- மாகாண சபை அமைச்சுக்கள்/உள்ளூர் அதிகாரசபை நிறுவனங்கள் தொடர்பில் இந்தப் படிவத்தை குறிப்பிட்ட மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களுக்கு அனுப்ப வேண்டுமென்ற விடயத்தை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்.

எனது இலக்கம் :- ..........................................

உமது இலக்கம் :- **EC/EDR/PE/2020/4)**

(குறித்த நிறுவனத்தின் அலுவலக முகவரி)

.....................................................

.....................................................

........................................ ஆம் திகதி

**பணியகப் பிரதானி,**

**தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவப் பணியகம்/ மாவட்ட தேர்தல்கள் அலுவலகம்,**

**தேர்தல் ஆணைக்குழு/ ......................................................**

**தேர்தல்கள் செயலகம்**

**சரண மாவத்தை,**

**இராஜகிரிய.**

<u>பாராளுமன்றத் தேர்தல் - 2020</u>

<u>அரச ஆதனங்கள் முறைகேடான விதத்தில் பயன்படுத்தப்படுவதைத் தடுத்தல்</u>

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் அனுப்பிவைக்கப்பட்ட 2020.03.03 ஆம் திகதிய, EC/EDR/PE/2020/4 ஆம் இலக்கமுடைய சுற்றறிக்கை இல.03 கிடைக்கப் பெற்றதென்பதையும், அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரச ஆதனங்களை முறைகேடான விதத்தில் பயன்படுத்துவதனைத் தடுப்பதற்காக உரிய முறையில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டதென்பதையும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுமாறு எனக்குக் கீழ் இயங்கும் அனைத்து கூட்டுத்தாபனங்களதும் திணைக்களங்களதும் தலைவர்கள் உட்பட அனைத்துப் பதவிநிலை அலுவலர்களுக்கும் அறிவிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதையும் இத்தால் அறியத் தருகின்றேன்.

02. இந்த அமைச்சு/ திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ அதிகாரசபை *(ஏற்புடையதல்லாத பகுதியைக் கீறி விடவும்)* வசமுள்ள வாகனங்களைப் பயன்படுத்தல்/ விடுவித்தல் சம்பந்தமான அலுவல்களை மேற்கொள்ளும் அலுவலர்/ அலுவலர்கள் பற்றிய விபரத்தை கீழ்க் குறிப்பிடுகின்றேன். மேலும், எனது கையொப்பம், பெயர் மற்றும் பதவி குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் எனது தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிடுகின்றேன்.

பெயர் : ..........................................................................................

பதவி :...........................................................................................

அலுவலக முகவரி : .............................................................................

தொலைபேசி இலக்கங்கள் :

i. அலுவலகம் :- ..........................................................

ii. இல்லம் :- ..........................................................

iii. கையடக்க:- ..........................................................

iv. மின்னஞ்சல் :- ..........................................................

...........................................

கையொப்பம்

...........................................

பெயரும் பதவியும்

i. தொலைபேசி இலக்கம்

ii. (அலுவலக) :- ....................................

iii. (இல்லம்) :- ....................................